Christian Temperance Association took place in theChengam Bazaar Hall, Georgetown, onSaturday under the presidency of the Rev. J. Stewart, M.A. Lieutenant R. F. Haukins, I.S.M.D, delivered a very interesting lecture, dealing with the medical side of temperance and explaining the great danger of the use of alcohol. In the unavoidable absence of the two other speakers, Messrs, C Selvaraju Moodeliar and Mr. L. I. Stephen delivered suitable addresses, the former in English and the latter in Tamil Two members of the Indian Christian Choral Union gave a vocal duet, and Indian music also found a place in the proceedings. The Chairman spoke a few words, and the meeting terminated with the Benediction, pronounced by the Chairman.

8th Day.

UNIVERSAL TEMPERANCE SUNDAY.—a devotional Temperance service was held at 6 P.M. in the Indian Christian Temperance Association's Lecture Hall, St George's Cathedral Road. The interior of the Hall was decorated with numerous pictures and the exterior with flags,and there was a very large gathering present The Temperance Campaign week started for the first time in Madras under the auspices of the Indian Christian Temperance Association which began on Sunday last, was brought to a close this day. During the week several meetings were held from day to day at the various centres of the city and were presided over by able and enthusiastic temperance advocates, and several influential European and Indian getlemen took part in advocating the cause of temperance. The Indian Christian Choral Union took part in the proceedings throughout the week and sang several appropriate hymns on each occasion.

The Rev. S. Y. Abraham, B. A., the vice-principal of the S. P. G. Theological College was in the Chair. Mr. G. V. Gnanamuthu, B.A.,L.T, and Mr. L. I. Stephen addressed those assembled, and the latter in a very pathetic appeal in Tamil, dwelt at length on the evils of intemperance, illustrating his address with anecdotes from ancient and modern history of the various countries, and from what one generally sees in every-day life.

The Chairman in his remarks appealed to the younger generation, who were responsible for forming the future Indian nation, to strenuously support Mr.T.Manuel,the Secretary of the Association, who had brought about a sucessful Campaign Week, by a strict adherence to the rules guiding their duties to God, to themselves and to mankind in general.

The meeting terminated with the benediction and "God Save the King."

Since the commencement of the Campaign Week about sixty pledges to temperance have been signed, we are told. (M. T. 29-11-09.)

WHAT OPIUM IS DOING IN SHANSI.

BY FLORENCE M. REID.

I HAVE come back to China after eight years' absence to find myself surrounded on every side with heartrending proofs of the ruin wrought by opium, its ravages being even more marked here in Shansi than in my former station in Kiangsi.

I most thankfully record the fact that the rulers of the people, wherever they are worthy of the name, are doing their utmost to carry out the decrees of the central government, and giving every assistance in their power to victims of the drug who desire to escape from its bondage. In this province of Shansi, which covers an area of 81,830 English square miles, not a single plant of opium poppy is to be found this year. The Yamens (local courts of justice) are entirely free from opium, whereas it used to be offered as a matter of course. In this prefectural city of Tsechowfu, which governs 5,000 square miles (a district as large as Yorkshire), the officials are whole-hearted in the matter.

The Fu (chief magistrate) is an old man and does not take a very active share in the work, but the Hsien (second magistrate) not merely puts out proclamations and sees they are enforced, but provides anti-opium medicine free for all who will use it, and uses his personal influence to the fullest extent, both in public and in private. The price of opium in the city shops has been raised to 800 cash per ounce (a full week's wages for a working man), while in the country districts it is practically unprocurable, with the result that the opium sots leave their homes and come to the towns, where they will beg, borrow, or steal in order to get the fatal drug; for it is a far easier thing to uproot a crop than a habit.

The disappointments in missionary work from this cause are innumerable. Let me mention a few of those I have heard of in the two months I have been here :

The daughter of the chief magistrate, an intelligent, well educated, and broad-minded lady, was greatly interested in Christianity, and two years ago seemed very near to the Kingdom; but the opium pipe was occasionally used, and the habit has grown —though still only used in what would be called "the strictest moderation" and now she does not care to see us, and has lost all interest in spiritual things.

A well-to-do tradesman's wife was the first woman in the city to profess conversion and ask for baptism. The Chinese Church never admits an opium smoker, however small the quantity used, so she came to the Refuge and broke off the habit as a preliminary to entering the Church. But her husbd died and she solaced her grief with a *little* opium, and now, though she still comes frequently to the services, it is pitiful to see her. The heavy lustreless eyes, sunken cheeks, sallow complexion, untidy dress, and dull listless manner, all proclaim the power of the drug. She *stands* to talk to us for as soon as she sits down her eyes close, and she falls into a kind of stupor, from which she rouses herself occasionally, only to sink back as soon as the brief stimulus is over. Last month she did not come for a fortnight, so on the second Sunday afternoon we went to see what had become of her, and found her lying apparently unconscious on the k'ang (the brick bed of North China). Her son said she had been lying thus for over twenty-four hours, and he did not know when she would wake. We spoke loudly to her, and she tried to raise herself, but she could neither understand nor answer, and we came away feeling that nothing short of Divine power could break such a chain. She talks sometimes of coming to break it off again—"hsia yin," meaning "put down the craving," is the expressive term used—but her will power seems gone, and she is the helpless slave of the enemy of souls.

One day, soon after our arrival, the lady who helps with the medical work was called to a case in the city. On her return she said, "Who do you think it was sent for me? You remember that bright, healthy countrywoman who was baby's wet nurse before you went home, and who so loved to hear the Gospel! She and her husband have left their country home because they could not get opium in the village, and now they are living in one wretched little room in the city, and starving themselves to buy opium.' "What has become of her child?' "I don't know; probably sold for opium!" A fortnight later she died—the effect of opium on a weakened heart and ill-nourished body.

And so it goes on! "Where is So-and-So, who was such a promising enquirer when we left?" "Taken to opium!" "What has become of that carpenter who did such admirable work after breaking off opium?" "Gone back to it again."

There is a sorrowful monotony about the responses to such enquiries that makes me dread to hear the question put. Frequently the information comes unsought. "That man is such a good tailor; he used to be employed by all the officials, but ——." No need to tell even a new-comer that he takes opium; the worn, sallow face and trembling hands tell their own tale. "He came regularly to the services for over a year, and we had bright hopes of him, but he never comes now." No! Christianity and opium are utterly incompatible! What then about the people who grow, manufacture, and export opium? Can *they* be *Christians*.

Just one more of the cases wich continually surround us, thrusting themselves on our notice, so that we cannot be ignorant of them if we would.

This afternoon, at a cottage meeting in the city, the women were very inattentive, for something was going on in a room at the further side of the courtyard. "Where is Mrs. Li?" "She canot come: she has important business." Important it certainly seemed to be, for two men came from the Yamen bringing a scarlet document with official seals, and handed it in with much ceremony. A poorly-clad woman stood at the door, holding to her breast a beautiful little boy about two years old, whose chubby arms were clasped about her neck. Her eyes were red with weeping, and her bosom still heaved with sobs. Presently out of the house came a degraded, sullen-looking man, bearing on his shoulders a great load of copper coins. "Come, and be quick about it!" he said fiercely to the weeping woman. The mistress of the house with cakes and sweets coaxed the child from his mother's arms to her own and quickly took him inside, while the mother reluctantly followed the man with the money.

"What does it all mean?" we asked. "Oh, you know Mrs. Li has no child, so she has bought that little boy for 16,000 cash [about 32s.] to be her own son. The boy's father wanted money for opium, so he has sold him to Mrs. Li, and the papers have been signed and the money paid this afternoon." "The mother seemed very sad at parting with him." "Yes! she has been weeping all day; but what can she do? He *will* have the 'foreign dirt,' and he had nothing else to sell."

Christian English mothers! are the sorrows of your Chinese sisters nothing to you? Will you not help to make the evil known that it may be put an end to?

"If thou forbear to deliver them that are drawn unto death, and those that are ready to be slain: if thou sayest, Behold, we knew it not; doth not He that pondereth the heart consider it? and He that keepeth thy soul, doth not he know it? and shall not He render to every man according to his works?"—*Britain's Opium Harvest.*

Tsêchowfu, Shansi, China,

THE TEMPERANCE HERALD.

மதுவிலக்குத் தூதன்.

துஞ்சினர் செத்தாரின் வேறல்ல ரெஞ்ஞான்று
நஞ்சுண்பார் கள்ளுண் பவர்—குறள்.

மதுவிலக்குத் தூதன்.

1909 ௵ டிசம்பர் ௴.

OURSELVES.

நமது பத்திரிகை.

நமது நாட்டின்கண் மதுபானத்தால் விளையும் எண்ணிறந்த தீமைகளை நிவிர்த்திக்கும் பொருட்டு, சிலவருஷங்களுக்கு முன்னே "மதுவிலக்குத்தூதன்" என்கிற இப்பத்திரிகையை ஆரம்பித்துச் சிலகாலம் நடத்திவந்தோம். இது நடைபெற்றகாலம் வரையில் எடுத்த நோக்கம் இனிதுற மிகவும் பிரயோஜனமான வழியில் இப்பத்திரிகை யுழைத்து வந்தது. இதை அநேக கனவான்களறிந்திருக்கிறார்கள். பலர் இதுவிஷயமாய் நற்சாக்ஷியும் பகர்ந்திருக்கிறார்கள். அங்ஙனமிருந்தும், பொது நன்மை விஷயத்தில் பொது ஜனங்களிடத்தில் காணப்படும் சிரத்தையின்மையாலும், இவ்வித பரோபகார பத்திரிகைகளை யாதரிக்கும் சிந்தையின்மையாலும் இப்பத்திரிகையினது ஆதரணைக்கு முட்டுண்டாகிச் சிலகாலம் இதை வெளியாக்கக்கூடாத நிலைமைக்குள்வந்துவிட்டது. கஷ்டத்தோடும் நஷ்டத்தோடும் இதை நிலைநிறுத்தமுயன்றும் எம்மாலியாமற்போனது. என்றபோதிலும் பத்திரிகையைமுற்றுமே கைவிடமனமின்றி இதை எவ்வாறேனும் மீண்டும் உயிர்ப்பித்து நிலைநிறுத்தவேண்டுமென்றுன்னி அநேக கனவான்களையும் நண்பர்களையும் முகதாவில் கண்டுபேசினபொழுது பத்திரிகையை மறுபடியும் உயிர்ப்பித்து நடத்துவதே நலமென்றார்கள். சிலர் அதற்குப் போஷகராவதாகவும் வாக்களித்தார்கள். பலர் அதனுடைய செலவுக்கு சொற்பமான சந்தாவைச்செலுத்தி இடையூறின்றி ஆதரிப்பதாகக்கூறினார்கள். தற்சமயம் இருநூறுபேருக்கதிகமான நண்பர்கள் இவ்வாறு எம்மைத் தைரியப் படுத்திப் பத்திரிகையை யாரம்பிக்கத் தூண்டியிருக்கிறபடியால், மிகுந்த மனமகிழ்ச்சியோடும், நன்றியறிதலோடும் இப்பத்திரிகையை இப்போது வெளியிட்டிருக்கிறோம். இதுகாறும் வெளிப்பட்டுலாவச் சக்தியற்றிருந்த நமது தூதன், தாராளசிந்தையும் உற்சாகமுமுள்ள நமது அன்பர் பலரின் உறுதிமொழியால் இப்போது வெளிப்போந்துலாவக் கடவுள் கிருபைபுரிந்தபடியால் அவருக்கு நன்றியறிதலான ஸ்தோத்திரஞ் செலுத்துகிறோம். இருநூறு அன்பர்கள்மட்டும் இப்பத்தி

ரிகையை ஆதரிக்க முன்வந்திருந்தால் போதுமா? இதைப்போல மும்மடங்குபேர் முற்பட்டால் மாத்திரந்தானே இப்பத்திரிகையினது சகல செலவுகளும் மூடும். ஆகவே இன்னும் பல கனவான்கள் நமது தூதனை ஆதரிக்க முற்பட வேண்டுகிறோம். நமது நாட்டின் தற்கால நிலைமையைக்கவனிக்கும் யார்தான் இப்படிப்பட்ட பரோபகாரவிஷயத்தில் உதவிசெய்ய முற்படாமலிருக்கக்கூடும்? ஆத்துமாவையும் சரீரத்தையும் அழிக்க வல்லமையுடைய கொடிய சத்துருவாகிய மதுவைத் தொலைக்கக் கங்கணங்கட்டிக்கொண்டிருக்கிற மதுவிலக்குத் தூதனை ஆதரிக்காதவர் வேறென்ன பொதுநன்மையை ஆதரிக்கப்போகிறார்கள்? அழிந்துபோகிற ஆத்துமாவைக்கண்டு கண்ணீர்விட்டுப் புலம்பும் உலகரக்ஷகரின் மெய்யடியார்கள், குடியென்னும் படுகுழியில் வீழ்ந்து அதோகதியாய் அழிந்துபோகிற இலக்ஷக்கணக்கான ஆத்துமாக்களுக்காக கவலைப்படவேண்டியதில்லையா? இவர்களுக்காக அவர்கள் கண்ணீர்விடமாட்டார்களா? ஆசார சீர்திருத்தத்தை விரும்பும் அன்பர்கள் இந்த நல்ல விஷயத்தில் பாடுபடாவிட்டால் வேறெந்தவிஷயத்தில் பாடுபடப்போகிறார்கள்? தேசத்தில் சுயாதீன அரசாக்ஷி வேண்டும் என்று வாதாடுவோர் பிரதமத்தில் செய்யவேண்டியதென்ன? சுயாதீன அரசைப்பெற்று நிர்வகிக்கப்போகிற சக்தியுடையவர்களாய்த் தங்களை யாக்கிக் கொள்ளுமாறு தேசத்தைப் பாழாக்கும் துர் ஆசாரங்களையும், குடிமுதலிய அவலக்ஷணமான கேடுகளையும் முதலாவது தொலைக்கவேண்டியதல்லவா அவர்கள்மேல் விழுந்த கடமை? ஆகையால் கிறிஸ்துவின் மெய்யடியாரும், இத்தேசத்தாரின் நன்மையை விரும்புவோரும் உண்டானால் அவர்கள் இந்த மதுவிலக்கு ஊழியத்துக்காகத்தங்களை முதலாவதாக ஒப்புக்கொடுக்க வேண்டியவர்களாயிருக்கிறார்கள். இதுவிஷயத்தில் தங்களாலியன்ற உதவியைச்செய்யக் கடமைப்பட்டவர்களாயிருக்கிறார்கள். ஏராளமானபேர் நமது பத்திரிகையை ஆதரிக்க முன்வருவார்களாக. பத்திரிகையின் ஆதரணையை விரும்பி அதன் சாசுவதநிதிக்காக திரவியசகாயஞ்செய்ய விரும்பும் நண்பர்களிடமிருந்து நன்றியறிதலோடே அவர்களுடைய நன்கொடையை யேற்றுக்கொள்ளுவோம். சந்தாவைமாத்திரம் செலுத்திப் பத்திரிகையை ஆதரிப்போர், கிரமமாய் அதைச்செலுத்திவரும்படி கேட்கிறோம். பத்திரிகைக்கு விஷயதானஞ்செய்வோரிடமிருந்து மதுவிலக்குச் சம்பந்தமான விஷயங்களையெல்லாம்பெற்றுப் பொதுஜனோபகாரமாய்ப் பிரசுரிக்க விருப்புற்றிருக்கிறோம். தவிர இன்னொரு உபகாரமும் செய்யக்கேட்டுக்கொள்ளுகிறோம். இந்தப் பொதுஜனோபகாரமான விஷயத்தில் சிரத்தையுள்ள சகலரும் தாம்மாத்திரம் பத்திரிகை சந்தாதாராவதோடு நில்லாமல் தங்களாலியன்ற அளவு பிரயாசை யெடுத்துப் பலநண்பரைச் சந்தாதாராக்கும்படி விரும்புகிறோம். இவ்வாறு நண்பர்கள தங்களாலியன்ற உதவியை யெல்லாம் புரிந்து வரும் பக்ஷத்தில் இப்பத்திரிகை யிடையூறின்றி அநேகவருஷகாலஞ் சீவித்து இந்நாட்டினுக்குப் பெருத்த ஆசீர்வாதமாயிருக்குமென்னத்தடையில்லை.

The Drink Traffic in the Madras Presdiency.

சென்னைராஜதானியில் மதுபான வியாபாரம்.

நமது சென்னை இராஜதானியில் நடக்கிற மதுபான வியாபாரத்தைப்பற்றி சங்கை பொருந்திய மோபட் ஐயரவர்கள் வெளியிட்ட ஒரு சிறுபுஸ்தகத்திலிருந்து சில குறிப்

புகளை மீண்டெடுத் தெழுதுகிறோம்: இந்த இராஜதானியில் உட்கொள்ளப்படுகிற வெறி யூட்டும் மதுபானம் உள்நாட்டுச் சாராயம் என்றும், ஐரோப்பிய சாராயம் என்றும் இருவகைப்படும். உள்நாட்டுச் சாராயங்கள், அரக், மோவா, பச்வா, சாமா என்று ஐவகைப்படும். இவைகளில் கள்ளும், பச்வாவும் காய்ச்சாமல் புளிப்பேற்றிய வஸ்துக்கள். மற்ற மூன்றும் காய்ச்சப்பட்ட சாராயங்கள். வடசர்க்காரிலே மலை நாட்டு ஜனங்கள் மாத்திரம் பச்வா, மோவா, சாமா என்கிற மதுபானங்களை யுட்கொள்ளுகிறார்கள். கள்ளும், அரக்கும் இராஜதானி முழுமையிலும் ஜனங்களால் உட்கொள்ளப்படுகிறது. கள் உள்ளூரிலேயே பனை, தென்னை, ஈந்து முதலிய மரங்களினின்று இறக்கப்படுகிறது. அரக்கு விசேஷமாய் சிலோனிலிருந்து இறக்குமதி செய்யப்படுகிறது. இராஜதானியிலும் சில விடங்களில் இதைக் காய்ச்சுகிறார்கள். சென்ற சில வருஷத்துக் கணக்கைப் பார்க்கையில் உள்நாட்டு வெளிநாட்டுச் சாராய வியாபாரம் அதிகப்பட்டிருப்பதாகவே தெரிகிறது. 1898-ம் வருஷத்தில் இந்த இராஜதானியில் 26,42,932 மரங்களினின்று கள்ளிறக்கப்பட்டன. 1905-ல் இந்தத்தொகை 31,97,126 ஆக உயர்ந்து விட்டது. வருஷவாரி மரமொன்று 40 காலன் கள் கொடுக்குமென்று ஒரு கணக்கேற்பட்டிருக்கிறது. இந்தப்படிக்கு மேற்கண்ட மரங்கள் கொடுக்கும் கள்ளின் மொத்தத் தொகை 12 கோடி காலன். இது இந்த ராஜதானி குடிஜனம் ஒவ்வொருத்தனுக்கும் $3\frac{1}{2}$ காலன் விகிதமாகிறது. இதனுடைய அரசிறை வருமானமும் சென்ற இருபது வருஷத்தில் மும்மடங்காய்ப் பெருகி யிருக்கிறது. 1888-ல் அரசிறை ரூ 39,65,736. 1907-ல் ரூ107,60,883. அரக்கும் இப்படியே விர்த்தியடைந்திருக்கிறது. விசேஷம் தென்னாற்காட்டு ஜில்லாவில் அரக்குச் சாராயம் உட்கொள்ளுதல்மிகுதியாக உயர்ந்திருக்கிறது. கள்ளுக் கடைகளும் சாராயக்கடைகளும் 20 வருஷத்துக்கு முன்னிருந்ததை விடத் தொகையில் குறைந்திருக்கிறது. 1887-ல் இருந்த கள்ளுக்கடை 26,096; சாராயக்கடை 17,226. ஆனால் 1907-ல் கள்ளுகடை 18,535. சாராயக் கடை 10,293; இது குறைவாய்க் காணப்பட்டாலும் ஜனத்தொகையில் 1,200 பேருக்கு ஒரு கடைவிகிதமாகிறது. இந்தியாவிலே இந்த ஒருமாகாணத்தில் மட்டுந்தான் நாட்டின் விஸ்தீரணத்துக்கும் ஜனத்தொகைக்கும் அதிகப்பட்ட கள் சாராயக் கடைகளிருக்கின்றன. பொதுவான ஏழை ஜனங்களால் அருந்தப்படுகிற கள் சாராயவிர்த்தி யிவ்வாறிருக்க, ஐரோப்பிய சாராயங்கள் முன்னைவிட அதிகமாக இப்போது இம்மாகாணத்திலிறக்குமதியாகின்றன. விஸ்கி என்கிற சாராயம் சகஜமாய் எல்லாருக்கும் ஏற்ற பானமாய் ஆய்விட்டபடியால் அது ஏராளமாய் இறக்கு மதியாகிறது. அதோடு இதுகாறும் சாராயப்பழக்க மில்லாதிருந்த படித்த இந்துக்களில் பலர் இப்போது மேல்நாட்டு முறைகளை அனுசரித்து நடக்க முயன்றபடியால் மேல் நாட்டுச் சாராயங்களைத் தருவித்து வழக்கமாயருந்த முற்பட்டிக்கிறார்கள். மத்திய தாரத்திலிருக்கிற இந்துக்கள் சாராயங்குடிக்க ஆரம்பித்தமையினாலேயே ஐரோப்பிய சாராயங்கள் ஏராளமாய் இறக்குமதியாகின்றவென்று இந்திய எக்ஸைஸ் கமிட்டியாரும் அப்பிராயபபட்டு வெளியிட்டிருக்கிறார்கள். இந்தியாவிலே ஐரோப்பியரும், இராணுவத்தாரும் அதிகமாய் சாராயங் குடிப்பதைக் குறைத்துக்கொண்டு வரபடித்த இந்தியர் இதை விர்த்திசெய்து வருவது விசனகரமான விஷயமென்று மிஸ்டர் மோபட் கூறுகிறார். அதோடு மதுவிலக்குச் சங்கங்களும் அதிகமான சிரத்தையோடு இத்தீமையை அடியோடே நீக்கவேண்டுமென்று விரும்புகிறார். இப்படிப்பட்டகாரியங்களைக் கேட்கும்போது நாம் இதற்காகப் பரிதபியாமலிருக்கக் கூடுமா? ஏழைகளிடத்திலே மாத்திரமன்று, தற்காலம் படித்த இந்தியரிடத்திலும் புகுந்து விட்ட இந்தக் கொடியப் பழக்கத்தை நீக்க முயலுவது இத்தேசத்தை நேசிக்கும் பிரஜைகள் ஒவ்வருவர் பேரிலும் விழுந்த கடமையாகும்.

Drunkenness A—Parable.

குடி வெறி.

ஒரு உவமானம்.

சிற்ப சாஸ்திரத்தில் வல்லவனான ஒரு சிற்பி ஒரு அலங்காரமான மாளிகை கட்டினான். அதன் சுவர்களில் எவரும் பார்த்ததிசயப்படும்படியான பல வித சித்திரங்களைச் சித்திரித்தான். கண்ணைக் கவரும்படியான பலவித கண்ணாடி விளக்குகளைத் தூக்கிவைத்தான். தரையிலே நேர்த்தியான

இரத்தின கம்பளங்களை விரித்தான். பட்டுப்பீதாம்பரம் முதலிய வற்றாற் சமைந்த திரைகளைத் தொங்க விட்டான். அதி விசித்திர விநோத வேலைப்பாடுகளமைந்த சட்டில், சோபா, நாற்காலி முதலிய பணிமுட்டுகளை நிறைத்து வைத்தான். அந்த வீடு பார்க்கிறவர்களுடைய கண்களைப்பறிக்கத் தக்க ரமணீயகாமுடைய தாயிருந்தது. ஒரு நாள் ஒரு மனுஷன் அந்த வீட்டில் வசித்திருந்தவர்களிடத்தில் வந்து தான் தூர நாட்டிலிருந்து வந்த சிநேகிதனென்றும், அந்தவீட்டிலுள்ளவர்களுடைய நல்வாழ்வைக் கருதிப் பாடுபடுகிறவனென்றும், தன்னால் அவர்களுக்கு மேலான பாக்கியம் வரப்போகிறபடியால் தன் தோழமை அவர்களுக்கு அத்தியந்த அவசியமென்றும் பலவித நயமான வார்த்தைகளைச் சொல்லி அவர்களை நம்பப்பண்ணினான். அவர்கள் அவனைப் பூராவாக நம்பித் தங்கள் வீட்டிலேற்றுக் கொண்டு சர்வோபசாரம் புரிந்து அவன் தோழமையைக் கொண்டிருந்தார்கள். இவ்வாறிருக்கு நாளில், உத்தம நண்பனாக வந்த அந்தப் பாதகன், அந்த அலங்கார மான மாளிகையைச் சிறுகச் சிறுகப் பாழ்ப்படுத்தி அதன் அந்தத்தைக் குலைக்கத்தொடங்கினான். சமயம் பார்த்து இரகசியமாக அவன் சுவரிலிருந்த அழகான சித்திரங்களைத் தேய்த்தழித்து விட்டான். மிகவும் கைவேலைப் பாடுள்ளதாயிருந்த பணிமுட்டுகளை நொறுக்கியுடைத்துப்போட்டான். தொங்க விட்டிருந்த நேர்த்தியான விளக்குகளை துவம்ஸம் பண்ணிப் போட்டான். பட்டுத்திரைச் சீலைகளையும், கம்பளங்களையும் பாழாக்கிவிட்டான். இக்கொடிய துஷ்டனுடைய செய்கை அந்த வீட்டிலிருந்தவர்களுக்கு என்னமாயிருந்திருக்கும்! சிநேகிதனைப் போல நடித்து உறவாடவந்த அந்தப் பயங்கரமான சத்துருவை இனி கணமேனும் தங்கள் வீட்டில் வைத்துக் கொண்டிருப் பார்களா? வைத்திருப்பார்களானால் அவர்களைப் போல மதிகெட்டவர்கள் பூலோகத்திலுண்டா? இருக்கமாட்டார்களென்று திட்டமாய்ச் சொல்லலாமல்லவா?

நல்லது, இது ஒரு உவமானம். மேலே சொல்லப்பட்ட அழகான மாளிகை இந்த உலகத்திலே ஒவ்வொரு ஆணும் பெண்ணும் படைத் திருக்கிற அற்புதமான சரீரம். இது மகாவல்லரான தெய்வசிற்பியால் கட்டப்பட்ட ஒப்பற்ற மாளிகை. இதனுடைய விசித்திரத் தன்மையை எந்தப்புலவனும் எடுத்துரைக்க முடியாது. "நான் பிரமிக்கத்தக்க அதிசயமாய் உண்டாக்கப்பட்டபடியால் உம்மைத் துதிப்பேன். நான் ஒளிப்பிடங்களிலே உண்டாக்கப்பட்டுப் பூமியின் தாழ்விடங்களிலே விசித்திரவிநோதமாய் உருவாக்கப் பட்டபோது என் எலும்புகள் உமக்கு மறைவாயிருக்க வில்லை" (சங். 139. 14, 15,) என்பது சத்தியமான வசனங்கள். இந்த விசித்திரவிநோதமான பரிசுத் மாளிகையைச் சர்வவல்லவரான பகவானே சமைத்து அழகுபடுத்தினார். புத்தி, மனம், சித்தம் முதலிய அலங்காரமான பணி முட்டுகளையும் இந்த மாளிகை யிலமைத்துச் சிறப்பித்தார். இதைத் தேடிவருகிற கள்ளச் சிநேகிதனார்? மதுபானம் என்கிறபெயரைத்தரித்த கொடிய சத்துருதான். அவன் நன்மையைக் கொண்டுவருகிற உத்தமனைப்போல மாயாஜாலஞ் செய்து உட்புகுகிறான். புத்தியை விசாலப்படுத்துகிற வனைப்போலவும், தளர்ந்த சரீரத்துக்குப் பலத்தை யூட்டி நிலைநிறுத்துகிறவனைப்போலவும், விசனகாலத்திலே சந்தோஷத்தையும் பாக்கியத்தையுந் தந்து களிப்பிக்கிறவனைப்போலவும் ஏமாற்றி உள்நுழையப் பார்க்கிறான். எத்தனையோ பாலியரும் புருஷரும்,பெண்களும், பெதும்பைகளும் இந்தக் கொடியவனுடைய வஞ்சக வார்த்தைகளை நம்பி அவனைத் தங்கள் அழகான மாளிகையிலே ஏற்றுகொண்டு அவனுடைய தோழமை பூண்டு வாழுகிறார்கள். அப்படிச் செய்வதின் பலனென்ன? நன்மை செய்கிறவனைப்போலநடித்துட்புகுந்த அந்த விரோதி இரகசியத்திலே இவர்களுடைய சரீரமாகிய மாளிகையை இடித்து நிலைகுலைத்துக் கொண்டு வருகிறான். அஸ்திபாரத்தின் அடியிலே பெரிய பள்ளத்தைத் தோண்டி முழு மாளிகையையும் சுபீலென்று சாய்த்து விடப் பார்க்கிறான். மனம், புத்தி, சித்தமாகிய அலங்காரமான பணிமுட்டுகளை நொறுக்கிக் கொண்டு வருகிறான். மனுஷனுடைய சரீரமாகிய மாளிகையிலே கடவுள் அழகுற வமைத்த பலவித சித்திரமாகிய உறுப்புகளைத்தேய்த்து நிர்மூலப்படுத்துகிறான்.

மது வென்னுங் கள்ள சிநேகிதனுடைய தோழமை கொண்ட நண்பனே! நீயுனக்குள்ளே வர இடங்கொடுத்திருக்கும் இந்த உற்பாத பிண்டத்தின் இரண்டகச் செயலை யறிந்திருக்கிறாயா? நீயுட்கொள்ளும் பொல்லாத சாராயம்உன் அங்கங்களை நசிக்கச்செய்து, ஆயுளைக் குறைத்து, மூளையைக் கெடுத்து, ஈரலைத் தின்று உன்னை அதோகதி

யாய் வீழ்த்திப்போட உள்ளுக்குள்ளே கிரியைச் செய்து வருகிற தென்பதை யுணருகிறாயா? "ஆசை வெட்கமறியாது", "கெடுமதி கண்ணுக்குத் தோன்றாது" என்பது போல அநேகர் தாங்கள் இந்தமதுபான மென்னும் சிநேகிதனிடத்திலே வைத்திருகிற ஆசையினாலே அவன் செய்யும் கேட்டின் தன்மையை அறியாமலிருக்கிறார்கள். அவன் தங்களுக்கு நன்மையே செய்கிற உத்தம நண்பனென்று நம்பி மோசம் போகிறார்கள். நண்பனே நீயுமப்படி குருட்டெண்ணமுடைய வனாயிருப்பாயானால், நீ தொழமைபூண்டிருக்கிற அந்தக் கொடிய சத்துருவின் உண்மையான குணபாவத்தை யீண்டெடுத்துக் கூறுகிறோம். கவனிப்பாயாக.

மதுபானம் சரீரத்துக்குத்திடனேயாவது பலத்தையாவது கொடுக்கிற தென்பது வீண் பேச்சு. குளிர், பசி, ஆயாசம், பலஹீனம் இவைகளை நீக்குகிற தென்பதும் அபத்தம். வியாதிகளைப்போக்கி, நோக்காட்டை நிவிர்த்திசெய்து, துக்கத்தில் ஆறுதலைத்தருகிற தென்பதும் மலடிமைந்தன் ஆகாயத் தாமரையைக்கொய்துவந்ததாகக்கண்டகனவேயொழிய மற்றப்படியன்று. இவ்வித ஒரு நன்மையாகிலும் மதுபானம் செய்கிறதேயில்லை. இதற்குப் பதிலாக அது தேகத்திலுள்ள சூட்டை அபகரித்துக் கொள்ளுகிறது. குளிரை நீக்குமென்கிறநம்பிக்கையோடு சாராயத்தை யுட்கொண்டவர்களை வைத்தியசாஸ்திரிகள் சீதோஷ்ண அளவைக்கருவி கொண்டு சோதித்துப் பார்க்க, அது தேகத்தில் இயல்பாயிருந்த சூட்டையும் உறிஞ்சிவிட்டதென்று கண்டு பிடித்திருக்கிறார்கள். வியாதிகளைப் போக்குவதற்கு பதிலாக இயல்பாய் வியாதிகளைப்போககுவதற்குரிய தேகத்தில்தானே அமைந்திருக்கும் சத்துவத்தை அதம்பண்ணிவிடுகிற தென்றுகண்டு பிடிக்கப் பட்டிருக்கிறது. இப்படியே எந்தவகையிலும் மதுபானம் நன்மை செய்கிற சிநேகிதனாயிராமல் தீமைசெய்கிற சத்துருவாகவேயிருக்கிறது. அது சரீரபலத்தைக் கட்டுகிறதாயிராமல் இடிக்கிறதாயிருக்கிறது. அது இன்பத்துக்குப் பதிலாய்த் துன்பத்தையும், களிப்புக்குப் பதிலாய் சலிப்பையும், சுகத்துக்குப் பதிலாய் அசுகத்தையும், வாழ்வுக்குப் பதிலாய்த் தாழ்வையும், வளர்ச்சிக்குப் பதிலாய் தளர்ச்சியும் தருகிறது. உலகமெங்கும் மதுபானம் பண்ணியிருக்கும் அநர்த்தங்களைச் சொல்லப்புகுந்தால் ஏடு இடங்கொள்ளாது. தேசங்களிலே பாதகச்செயல்களை அது அதிகரிக்கிறது. வறுமையையும், பிணியையும் அதிகப்படுத்தி யிருக்கிறது. சொஸ்த புத்தியை நிக்கிரகம் பண்ணி பைத்தியத்தை யுண்டாக்கியிருக்கிறது. இவைகளை யெல்லாம் தக்க ஆதாரங்களோடு "நமது தூதனில்" இனி கிரமங்கிரமமாய் வெளியிட்டு வருவோம். மதுபானம் தேசத்துக்குச் செய்கிறகேடு, ஜாதிக்குச் செய்கிற கேடு, குடும்பத்துக்குச் செய்கிற கேடு, பிரதி ஆளுக்குஞ் செய்கிற கேடு; சரீரத்துக்குச் செய்கிற கேடு, ஆத்மாவுக்குச்செய்கிற கேடு ஜீவியத்துக்குச் செய்கிற கேடு இவைகளை யெல்லாம் நியாயவாயிலா யெடுத் தெழுதி வருவோம். இதை வாசிக்கும் நண்பர்கள், நண்பனைப் போல நடித்து உட்புகவரும் அந்தப்பொல்லாத சத்துருவின் கொடிய வஞ்சகத்தை யறிந்து அவனுக்கிடாகொடாமல் தடுக்கவேண்டும். ஏற்கனவே நண்பர்களின் வீடுகளில் வந்துபுகுந்து கண்ணுக்குத் தெரியாவண்ணம் பாழ்ச்செய்து வருவானாயின், இனிமேலாவது அவனை அடியோ தண்டமாயடித்து வெளியிலேபிடித்துத்தள்ளிக் கதவைப்பூட்டவேண்டும். இவ்வாறு செய்யாமல் அவனுடைய துன்மார்க்கச்செயலையறிந்தும் அவனுக்கு வீட்டில் இடங்கொடுத்திருப்பார்களானால் அவர்களைப் போல நிர்ப்பாக்கியரும் மதிகேடரும் இந்தக்கடல்சூழ்ந்த பேருலகில் வேறு யாருமிருக்கமாட்டார்கள்.

News and Notes.

சமாசாரக் குறிப்புகள்.

ஒரு கோடீஸ்வரன் மரணசாதனம்:— ஜான் கென்னடி என்கிற ஸ்காட்டிஷ்-அமெரிக்க கோடீஸ்வரன் ஒருவர் சமீபத்தில் மரித்துப்போனார். இவர் தமது உறவின்முறையாருக்கு 70 லக்ஷம் பவுனும், தருமஸ்தாபனங்களுக்கும், மிஷன்களுக்கும், சர்வகலாசாலைகளுக்கும் 50 லக்ஷம் பவுனும் கொடுக்கவேண்டுமென்று எழுதிவைத்திருக்கிறார்.

ஸ்திரீ சுதந்தரவாதிகள்:—புருஷர்களைப்போலவே ஸ்திரீகளுக்கும் அரசாங்க விவகாரங்களில் உரிமைதர வேண்டு மென்று போராடுகிற ஸ்திரீ சுதந்தர வாதிகளான

லண்டன் பட்டணத்துப்பெண்பிள்ளைகள் அதிகாரிகளுக்குச் சொல்லவொண்ணா இடைஞ்சலையும் உபத்திரவத்தையுங் கொடுத்து வருகிறார்கள். மிஸிஸ் சாபின் என்பவளும், மிஸ் நீலன்ஸ் என்பவளும் சம்மதச்சீட்டுகள் போடும் பெட்டிக்குள்ளே இங்கியையூற்றினபடியால் கைதுசெய்யப்பட்டிருக்கிறார்கள். கில்ட்ஹால்ட் விருந்தின்போது சிலஸ்திரீகள் கல்லாலெறிந்து கண்ணாடி ஜன்னல்களை உடைத்து விட்டார்கள். இவர்களும் பிடிபட்டிருக்கிறார்கள். இவர்களிலிருவர் சிறைச்சாலைக் கனுப்பப்பட்டார்கள். சிறைச்சாலைக்கனுப்பித் தண்டித்த போதிலும இவர்கள் அஞ்சாமல் உற்பாதங்களை விளைத்துவருகிறார்கள்.

திரான்ஸ்வாலில் இந்தியர்கள் படும்பாடு:—திரான்ஸ்வாலில் இந்தியர்கள்வெகு கஷ்ட நிஷ்டூரங்களையனுபவித்து வருகிறார்கள். அங்கே இந்தியருக்குத் தலைவராயிருக்கிற மிஸ்டர் காந்தியின் குமாரன் மிஸ்டர் ஹரிலால் காந்தியென்பவர் உள்நாட்டுக்குள் வரப்படாமல் தடுக்கப் பட்டவராயிருந்தும் சட்டத்தை மீறிவந்தாரென்று கைதிசெய்யப்பட்டு 100 பவுண் அபராதம் விதிக்கப்பட்டார். அபராதம் செலுத்தாவிட்டால் 6 மாதம் கடினசிக்ஷை விதிக்கப்பட்டது. அவர் சிக்ஷையையே தெரிந்துகொண்டு சிறைச்சாலைக்குப் போயிருக்கிறார்.

கர்நூலில் ஒரு விதவா விவாகம்:—கர்நூல் கோர்ட்டில் ஹெட்கிளார்க் உத்தியோகஞ் செய்கிற மிஸ்டர் வேங்கட கிருஷ்ணையா என்பவர் சிறுவத்தில் வைதவ்வியமடைந்த 10 பிராயமுடைய தம்மகளை பலத்த ஆக்ஷேபனையின் மத்தியில் மறுவிவாகஞ் செய்துகொடுத்தார். புரோகிதன் வரமாட்டேனென்று சொல்லி விட்டான். அநேகர் ஆக்ஷேபித்தார்கள். இராஜமகேந்திரத்திலிருந்து மிஸ்டர் வீரேசலிங்கம் பந்துலுவையழைத்து விவாகத்தை முடித்தவர். இவரையொத்த வைராக்கியர் சிலர் முன்னுக்கு வந்தாலும் இந்தியாவின் துராசாரங்களில் பல தலை காட்டாமலொழியும்.

பிரின்ஸ் ஐடோ வன்கொலையுண்டது:—கொரியா தேசத்தில் ஜப்பானுடைய பிரதிநிதியாய் ரெஸிடெண்டு ஸ்தானம் வகித்து அத்தேசத்து இராஜாங்கத்தை நடத்திவந்த பிரின்ஸ் ஐடோ என்பவர் சிலநாட்களுக்கு முன்னே ருஷிய அரசிறை மந்திரியைச் சந்திக்கும் பொருட்டு ஹார்பின் ரெயில்வே ஸ்டேஷனுக்குப் போக, அந்த இடத்தில் இராஜவிரோதியான கொரியனொருவன் அவரைத்துப்பாக்கியால் சுட்டுக் கொலை புரிந்தான் என்கிற விசனகரமான செய்தி வந்திருக்கிறது. அவரோடு கூட இருந்த வேறு சிலருக்கும் கடுங்காயம்பட்டது. கொலைப்பாதகன் உடனே பிடிபட்டுக்கைது செய்யப்பட்டான். ஜப்பானால் கொரியா படுங் கஷ்டங்களுக்காகவும், தனது பந்துக்களில் சிலருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டதற்காகவும் பழிவாங்கும் நோக்கமாய் இந்த அகிருத்தியம் புரிந்ததாய்க்குற்றவாளி சொன்னான். பிரின்ஸ் ஐடோ தற்கீலம் உலகமெங்கும் கீர்த்திபெற்றுள்ள ஜப்பானிய இராஜதந்திரிகளில் விசேஷமானவர். இவருடைய வன்கொலையைக்கேட்டு உலகமெங்கும் துக்கிக்கிறது.

இராஜப்பிரதிநிதிமேல் வேடிகள் எறிந்தது:—தற்காலம் இந்தியாவில் சுற்றுப்பிரயாணஞ் செய்துகொண்டு வருகிற நமது இராஜப்பிரதிநிதி லார்ட் மின்டோவும் அவர்பத்தினியும் சிலநாளைக்குமுன்னர் ஆமதாபாத்தில் தெருவில் பவனிவந்து கொண்டிருக்கையில்,ஜனக்கூட்டத்திலிருந்து யாரோதுன்மார்க்கர் இரண்டு வெடிகளை அவருடைய வண்டியிலெறிந்தார்கள். அவற்றில் ஒன்றை ராஜப்பிரதிநிதியின் வண்டிக்கு இடது பக்கமாய்க் குதிரைமேல் வந்துகொண்டிருந்த சார்ஜெண்டு தம்முடைய கத்தியினால் தட்டித் தள்ளிவிட்டார். இரண்டாந்தரம் எறியப்பட்ட வெடி, லேடி மிண்டோவுக்குக் குடைபிடித்துக்கொண்டு உட்கார்ந்திருந்த ராஜப்பிரதிநிதியுடைய ஜமேதாரின் மணிக்கட்டில் பட்டுக் கீழே விழுந்தது. லார்ட் மிண்டோவும் லேடி மிண்டோவும் ஒன்றும் சம்பவியாதது போலவே கோரிக்குச்சென்றார்கள். அப்பால் வழியோடு போன ஒருவன், அந்த இரண்டு வெடிகளில் ஒன்றை யெடுத்ததாகவும், அது வெடித்து அவனுக்குப்பலத்தகாயத்தை உண்டாக்கினதாகவும் ஒரு ரிபோர்ட் ராஜப்பிரதிநிதியின் கூடாரத்துக்கு எட்டியதாம். அந்த வெடிகள் பாம்ப் என்கிற வெடிகள் என்றே சொல்லப்படுகிறது. தீமைசெய்யவேண்டுமென்கிற நோக்கத்தோடே துரோகிகளா

ல் எறியப்பட்டது. இந்தச்சதிச்செயலைக் கேட்டு இந்தியாவே நடுங்குகிறது. லார்ட் மிண்டோ ஆபத்தினின்று தப்பினதை முன்னிட்டு சக்கிரவர்த்தி அவருக்கு வாழ்த்துதல் அனுப்பிவைத்தார்.

திருவாங்கூர் இராச்சிய சட்டம்:--திருவாங்கூர் இராச்சியத்தில் நடவடிக் கையிலிருக்கும் சட்டத்தின்படி பிராமணனுக்கு மரண தண்டனை கிடையாது என்று தெரியவருகிறது. சில நாட்களுக்கு முன்னர் அத்தேசத்திலுள்ள ஊட்டுப்புரையொன்றில் காலக்கணக்கின்றி வீண்சோறு தின்றுகொண்டிருந்த ஒரு பிராமணன் தான் சூதாடுவதற்காகத் தன் மனைவி பணம்கொடுக்க இஷ்டப்படாததால் அவளை ஒருவாளினால் சின்னபின்னமாய் வெட்டினான். அந்தக் கேஸ் கோர்ட்டுக்கு வர, ஜட்ஜியானவர் அப்பாதகனுக்கு மரணதண்டனை விதிக்கக் கூடாததற்காக விசனப்பட்டு, ஆயுள்பரியந்தம் கடுங்காவலி லிருக்கும்படித் தீர்ப்பு செய்தார். மனு தர்ம சாஸ்திரத்தை யொட்டி இவ்வித சட்டஞ் செய்யப் பட்டிருக்கிறதாம். இதை அறிவாளிகளெல்லாரும் கண்டித்துப் பேசுகிறார்கள்.

துருக்கியின் சீர்திருத்த அரசியல்:—சில நாளைக்கு முன் துருக்கி சுல்தான் ஏஷியா மைனரிலுள்ள இஸ்மிட் என்ற இடத்திற்கு வந்தபோது அவர் வரவு அவ்விடத்தில் வெகுவாய்க் கொண்டாடப்பட்டது. அனேக அதிகாரிகளும், மதாசாரிகளும் அவருடைய பேட்டிக்கு வர, சுல்தான் ஜாதிமத பேதமின்றித் தமது குடிகள் யாவரும் சந்தோஷத்துடன் சௌக்கியமாக ஜீவிக்கவேண்டியது தான் தமது முக்கியக் கருத்தென்றும், தம் தேசத்து அரசியலமைப்பை ஒட்டி அவர்கள் ஒழுகுவதால் மாத்திரமே இக்கருத்து நிறைவேறுவது சாத்தியமென்றும் கூறினார். தற்கால அரசியல் பொதுவாய் நன்மைக்கேதுவாயிருக்குமென்றும், இதுகாறும் நடந்தேறிய கொலைகளும் சங்காரங்களும் இனிநடவாவென்றும் நம்புகிறோம். கிறிஸ்துமார்க்க சுவிசேஷபிரபல்ய விஷயத்தில் இத்தனைக்காலமிருந்த கட்டுதிட்டங்கள் நீக்கப்பட்டுவருகின்றனவென்றுங் கேட்டு மகிழுகிறோம்.

கேஞ்சம் ஜில்லாவில் புயல்:—அக்டோபர் மாதக்கடைசியில் கெஞ்சம் ஜில்லாவில் பலமானபுயலடித்துக் கள்ளிக் கோட்டா முதல் மண்டேசாவரையில் பெருத்த சேதமுண்டாக்கி விட்டது. வங்காள இருப்புப்பாதையில் கள்ளிக் கோட்டாவுக்கும் ரம்பாவுக்கும் இடையில் பெரிய உடைப் புண்டாய் விட்டது. புயலினது பலத்தால் பர்ஹாம்பூர் டவுனில் குடியிருப்பு வீடுகளில் அனேகம் விழுந்துபோய் விட்டன. பர்ஹாம் பூருக்குப் பக்கத்தேயுள்ள கிராமங்களும் தரை மட்டமாய்விட்டன. பர்ஹாம்பூர் ஜூபிலி ஆஸ்பத்திரியின் ஒரு பக்கம்இடிந்து விழுந்துபோய்விட்டது. அப்படி அந்த ஆஸ்பத்திரிக் கட்டிடம் இடிந்து விழுந்ததில், ஆஸ்பத்திரியிலே சிகிச்சை செய்யப்பட்டு வந்த இரண்டு நோயாளிகள் இறந்து போய் விட்டார்கள். பர்ஹாம்பூர் டவுனிலும் பல மரணங்கள் நேர்ந்துபோயின. ரஸ்தாக்களில் எல்லாம் மரங்கள் சாய்ந்து போயின. அம்மரங்களில் வாசஞ்செய்து வந்த பறவைகள் எல்லாம் செத்துப்போயின. தங்கள் வீடுவாசல்களை யிழந்த தவிக்கும் ஏழைகளுக்கு ஊர்லாம ஜமீன்தார் ஆகாரம் வஸ்திரங்கொடுத்து ஆதரித்தார்.

சிகரற்று துர்ப்பழக்கம்:—பர்மாவிலே சிறு பையன்களுக்குள்ளே சிகரற்று பிடிக்குந்துர்ப்பழக்கம் வெகு மும்மரமாய்க்குடி கொண்டிருக்கிறது அவ்விடத்து அதிகாரிகளின் கவனத்தையிழுத்திருக்கிறது. பள்ளிக் கூடத்துப்பையன்களுக்குள் இத்துர்ப்பழக்கம் பரம்பாதபடி விசேஷகவலையெடுத்துக்கொண்டிருக்கிறார்கள். வித்தியா இலாகாதலைவராகிய மிஸ்டர் J. G. கவர்டன் எல்லாப்பள்ளிக்கூடத்தலைவர்களுக்கும் ஒருச்சுற்றுக் கடிதம் அனுப்பிவைத்திருக்கிறார். அதில் சகலபள்ளிக்கூடத்தலைவர்களும், பிரதமஉபாத்திமாரும் அவ்வப்பள்ளிக் கூடத்துப் பையன்கள் சிகரற்று வாங்காதபடிக்கும் பிடிக்காதபடிக்கும் பார்த்துக் கொள்ளவேண்டுமென்றெச்சரித்தெழுதியிருக்கிறார். அதோடு அடிக்கடி அவர்கள் புகையிலைச் சுருட்டு, சிகரற்று இவைகளினால் வருகிற தீமையைப் பற்றிப் பையன்களுக் கெடுத்துப் போதிக்க வேண்டுமென்றுஞ் சொல்லி யிருக்கிறார். இந்த நாட்டு வித்தையதிகாரிகளும் மிஸ்டர் கவர்டனுடைய மாதிரியைப் பின்பற்றினால் நன்றாயிருக்கும்.

பிரான்ஸில்புரோடேஸ்டாண்டுமதம்:—ஒரு வருஷத் துக்கு முந்தி பிரான்ஸ் தேசத்தில் வைராக்கியமான கத்தோலிக்கர் நிறைந்த ஒரு இடத்துக்குப் புரோடெஸ்டாண்டு சுவிசேஷகன் ஒருவர் அனுப்பப்

பட்டார். அவர் சொற்பகாலத்துள் அங்கே விசேஷித்த மாறுதலையுண்டாயிருக்கிறாரென்று கேள்விப்படுகிறோம். 150 பேர் கொண்ட ஒரு புரோடெஸ்டாண்டு சபையையுண்டாக்கி யிருக்கிறார். சுமார் 22 கிராமத்திலுள்ள ஜனங்கள் அவரிடங் கூடி வந்து சுவிசேஷ சரித்திரங்களைச் சொல்லும்படி கேட்டுக்கொள்ளுகிறார்கள். லாங்கீக் என்கிற பட்டணத்தில் ஒரு கோவிலைக் கட்டியிருக்கிறார். அதிலே 200 அங்கங்கள் சேர்ந்திருக்கிறார்கள். இவர்களில் பலர் நாஸ்திகராயிருந்தவர்களாம். கர்த்தர் அந்த தெய்வ ஊழியன் வேலையை ஆசீர்வதிப்பாராக.

பட்டியாலாவில் இராஜ துரோகம் :— பட்டியாலா சமஸ்தானத்தில் 53 பேர் இராஜதுரோக குற்றத்தில் பிடிபட்டிருக்கிறார்கள். இவர்களில் சிலர் சமஸ்த்தானத்தில் பெரிய உத்தியோகஞ் செய்பவர்கள். சிலர் பள்ளிக்கூட மாணாக்கர். பரோடாவிலுள்ள ஆரிய சமாஜத்தாருக்கும் இவர்களுக்குமிடையில் நடந்த சில கடிதபோக்குவரத்தைக் கொண்டு இவர்கள் பிடிபட்டிருக்கிறார்கள்.

மைசூரில் வைசிறய் :— நமது இராஜப்பிரதிநிதி லார்ட் மின்டோவும், பத்தினியாரும் இப்போது மைசூர் சமஸ்தானத்தில் விஜயமாகி யிருக்கிறார்கள். லார்ட் கர்ஸன் வந்தபோது யானை வேட்டைக்கு ஏற்பாடு செய்ததுபோல, பேர்போன மைசூர் யானைக்காடுகளில் வைசிறாயவர்கள் வேட்டையாடுவதற்கான பல யத்தனங்கள் செய்யப்பட்டிருக்கிறது. டிசம்பர் மாதம் 8உ வரையில் அங்கிருந்து பிறகு சென்னைக்கு வருவார்.

நரமாமீச பக்ஷிணிகள் :— அட்மிரால்டி தீவுகளிலே நரமாமிசபக்ஷிணிகள் மூன்று ஐரோப்பியரும் மூன்று சீனருமடங்கிய ஒரு படகைப் பிடித்து, தப்பித்தோடிப் போன ஒரு ஐரோப்பியனைத் தவிர மற்ற ஐவரையுஞ் சாப்பிட்டு விட்டதாக மணிலாவிலிருந்து தந்திசெய்தி யெட்டியிருக்கிறது.

வித்தியாதானம் :— ஜோதிப்பூர் மகாராஜா, நமது இராஜப்பிரதிநிதியாகிய லார்ட்மின்டோ இந்தியாவுக்குச்செய்த நன்மைக்கும் சுதேச சமஸ்தானங்கள் மீது அவருக்கிருக்கும் மதிப்புக்கும் நன்றியறிதலாக அவர் பேரால் அஜ்மீர்மேயோ காலேஜுக்கு ஒரு லக்ஷம் ரூபாய் நன்கொடை செய்திருக்கிறார்.

டோர்னாக்கல் மிஷன் வேலை :— நாஷனல் மிஷனரி சங்கம் டோர்னாக்கல் என்னுமிடத்தில் ஆரம்பித்துநடத்தி வருகிற வேலை கடந்த வருஷங்களில் நல்ல விர்த்தியடைந்திருக்கிறதெனக்கேட்டு மகிழ்கிறோம். கிறிஸ்து மதப் பிரவேசஞ்செய்தவர் தொகை நூற்றுக் கணக்கா யிருக்கிறது. இந்திய கிறிஸ்தவர்தாமாகவே ஸ்தாபித்து நடத்துகிற மிஷன்கள் இந்தத்தேசத்தில் அதிகப்பலிதப்படும். இந்த முயற்சி நன்கு விர்த்தியடையும்படியான காரணமிருக்கிறது. எல்லா இந்தியக் கிறிஸ்தவர்களும் சேர்ந்து இந்தப்படி உழைத்தால் இந்தியாவின் இரக்ஷிப்பு சீக்கிரத்தில் வந்து விடும்.

இந்தியாவிலே சுரம் :— இந்தியா முழுமையிலும் சென்ற பத்து வருஷ காலத்தில் சுரத்தினால் மாத்திரம் செத்தவர் 45 லக்ஷம் பேர். இந்த வியாதியைப் பற்றி ஆலோசித்து இதை இந்தியா முழுமையிலும் மட்டுப்படுத்த என்ன பிரயத்தினஞ் செய்யலாமென சிம்லாவில் ஒரு சங்கம கூடிப் பேசப்பட்டது.

மகமதியரும் பிரிட்டிஷ் அரசாக்ஷியும் :- இந்தியாவின் பலபாகங்களிலும் மகமதியர் கூட்டங்களில் கூடி பிரிட்டிஷ் கவர்ன்மெண்டை வாயாரவாழ்த்துகிறார்கள். காரணம் மகமதியருக்ரு அரசாங்கத்திலே விசேஷித்த சிலாங்கியங்களும் உரிமைகளும் இப்போது கிடைத்திருக்கிறது. புதிதாயுண்டாக்கப் பட்ட சட்ட சபை யொழுங்குகளில் மகமதியருக்கு விசேஷ உரிமைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. மகமதியர் இனி இந்துக்களோடு போட்டிப்போடாமல் தனிப்பட அரசாங்கத்தில் பிரதிநிதித்துவம் அடையலாம். இது போதாமல், நமது சக்கிரவர்த்தியின் சொந்த கவுன்ஸிலாகிய பிரிவிகவுன்ஸிலில், ஒரு காலத்தில் இந்தியாவில் ஜட ஜாயிருந்து இப்போது லண்டனில் வசித்து வரும் மிஸ்டர். அமீர்அலி என்கிற மகமதியகனவானை மெம்பராக நியமித்திருக்கிறார்கள். இந்தியருக்கு ஒருக்காலும் இப்பதவி கிடைத்தவில்லை. இதனால் மகமதியர் நன்றிசெலுத்தக் கடமைப்பட்டவர்களே.